# திருபலிபூஜை

1. அநேக கிறிஸ்தவ மார்க்கத்தார், திருபலிபூஜை என்பது கர்த்தருடைய ராப்போஜனத்தின் வேறு ஒரு பெயர்தானே! என்று களங்கமில்லாமல் நினைக்கலாம். அதுதான் இல்லை! அது முற்றிலுமாக வித்தியாசமானது. கர்த்தருடைய ராப்போஜனம் என்பது கல்வாரியிலே நிறைவேற்றப்பட்ட கிறிஸ்துவின் மரணத்தை கொண்டாடுவதாகும். ஆனால் திருபலிபூஜை அப்படியல்ல. அது செய்யப்படும் ஒவ்வொரு சமயத்திலும் செய்யப்பட்ட பாவங்களுக்காக மறுபடியும் செலுத்தும் ஒரு புது பலியை அது குறிக்கிறது. கிறிஸ்துவை மறுபடியும் பலியிட வேண்டும் என்கிற நோக்கத்திற்காக, குருவானவர் அப்பத்தை ஆசீர்வதிக்கும் போது அது அவருடைய கரங்களில் கிறிஸ்துவின் உண்மையான சரீரமாகிறது என்று நம்முடைய ரோமன் கத்தோலிக்க சிநேகிதர்கள் நம்புகிறார்கள்.
2. கல்வாரியில் செலுத்தப்பட்ட கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியம். ஒருவனுடைய அடிப்படையான மூல பாவத்தையும், கடந்த காலத்தில் செய்யப்பட்ட பொதுவான பாவங்களையும் மூடிப்போடுகிறது என்றும், ஆனால் அவனது அன்றாட பாவங்கள், தவறுகள், குறைபாடுகள் ஆகிய இவைகள், அவ்வப்பொழுது செய்யப்படுகிற கிறிஸ்துவின் புதிய பலிகளினாலே சுத்திகரிக்கப்பட தேவையாயிருக்கிறது என்றும் அவர்கள் கோருகிறார்கள். இவ்விதமாக திருபலிபூஜையில் அடையாளப்படுத்துகிற கருத்தின்படி ஒவ்வொரு நாளும் உலகம் பூராவிலும் கிறிஸ்து மறுபடியும் பலியிடப்படுகிறார். வேத வாக்கியங்களில் இது தேவனுடைய பார்வையில் ஒரு “அருவருப்பு” என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால், “கிறிஸ்து இனி மரிப்பதில்லை” என்றும், தன் மூலமாக பிதாவினண்டைக்கு வருகிற எல்லாரையும் “ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்” என்றும் வேதாகமத்தில் சொல்லியிருக்கிற உண்மையை அது அவமதிக்கிறதாயிருக்கிறது (ரோம 6:9; எபி 10:10, 14).
3. திருபலிபூஜையில் வர்ணிக்கப்படுகிற திரும்ப, திரும்ப செய்யப்படுகிற பலிகள், பஸ்கா ஆட்டுக்குட்டியிலும், ஞாபகார்த்த ராப்போஜனத்திலும்

அடையாளமாயிருக்கிற கல்வாரியில் செலுத்தப்பட்டட அந்த உன்னத பலியின் மதிப்பை உணரக்கூடாத அளவுக்கு மங்கலாக்கும் விளைவை கிறிஸ்தவர்களின் மனதில் உண்டாக்குகிறது. தங்களுடைய பாவங்களை போக்குவதற்காக எதிர்பார்த்து விசேஷமாக திருபலிபூஜையினண்டைக்கு செல்லுபவர்கள், திரும்பவும் நிறைவேறுதலான மெய்யான பஸ்காவை ஆழ்ந்த கவலையுடனும், உயர்வான நன்கு மதித்தலுடனும் கண்டுகொள்ள கூடாதவர்களாய் ஆகிவிடுகிறார்கள். ஆகையால், "பெரிய வெள்ளிகிழமை"யின் கொண்டாட்டத்தை கிறிஸ்தவர்கள் தொடர்ந்து அனுசரிக்கும்போது, அதற்கு முந்தின இரவில் கொண்டாடப்பட்ட ஞாபகார்த்த ராப்போஜனம், அவர்களுக்கு உபயோகமில்லாமல் போய்விட்டது. ஆனால் இந்த ராப்போஜனத்தைத்தான் நமது கர்த்தர் "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக் 22:19) என்று கருத்தாய் அனுசரிக்க கட்டளை கொடுத்தார். அதைத்தான் பரி.பவுலும் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம் என்று கூறி முக்கியத்துவப்படுத்துகிறார்.

4. புராட்டெஸ்டென்ட் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள், திருபளிபூஜையின் கொள்கை வேதாகமத்துக்கு முற்றிலுமாக புறம்பானது என்று மறுத்துத் தள்ளியிருந்தாலும், அது சம்பந்தப்பட்ட மட்டில் அதை கைவிட்டு விட்டு, வேறு ஒரு முரண்பாடான ஆசாரிப்புக்குத் திரும்பியிருக்கிறார்கள். இடைக்காலத்தில் அவர்கள் திருபலிபூஜையை அடிக்கடி கொண்டாடுவதில் பழக்கப்பட்டு போயிருப்பதால், கர்த்தருடைய ராப்போஜனத்தை எத்தனைதரம் வேண்டுமானாலும் கொண்டாடலாம். அது வெறும் சந்தர்ப்பவாதத்திற்குரிய விஷயந்தான் என்று கருதுகிறார்கள். ஆகையால் சிலர் அதை நான்கு மாதங்களுக்கு ஒரு முறையும், சிலர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், சிலர் ஒவ்வொரு மாதமும், சிலர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கொண்டாடுகிறதை நாம் காண்கிறோம்.

5. இவ்விஷயத்தில் ஏற்பட்டிருக்கிற இந்த பொதுவான தளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் இரண்டு காரணங்கள் உண்டு - (1) நம்முடைய கர்த்தருடைய மரணம் நிறைவேறுதலான பஸ்கா ஆட்டுக்குட்டியாகவும்,

அதன் கொண்டாட்டம் நிறைவேறுதலான பஸ்கா ராப்போஜனமாகவும் இருக்கிறது என்கிற உண்மையை கிறிஸ்தவ ஜனங்கள் பொதுவாக கவனித்தும் கவனியாது தள்ளிவிட்டிருக்கிறார்கள். (2) “இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம்” என்று நமது கர்த்தர் சொன்ன இந்த வார்த்தைகள், உங்களுக்குப் பிரியமான போதெல்லாம் இதைச் செய்யுங்கள் என்று குறிக்கிறதாக அவர்கள் தப்பர்த்தமாக செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் பஸ்கா கொண்டாட்டத்தை வருடாந்தர சம்பவமாக அனுசரிக்கிற யூதர்களும், என்னுடைய சீஷர்களுமாகிய நீங்கள் எல்லாரும் இந்த சந்தர்ப்பத்தை கொண்டாடும் போதெல்லாம், இதை (என்னை) நினைவு கூரும்படி செய்யுங்கள் என்பதை இந்த வார்த்தைகள் உண்மையாகக் குறிக்கின்றன.

6. அடையாளமான ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டு இரத்தம் தெளிக்கப்பட்டதினால் அடையாளமான முதற்பேறானவர்கள் கடந்து செல்லப்பட்டு அதன் மூலமாய் அடையாளமான எகிப்திலிருந்தும், அதன் அடிமைத்தனத்திலிருந்தும் அடையாளமான இஸ்ரவேலர்கள் அடைந்த அடையாளமான விடுதலை ஆகிய இவைகளை நினைவுகூரும்படி கூறப்படவில்லை. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே. அதை நினைவுகூரும்படி பண்டிகையை அடிக்கடியல்ல வருடந்தோறும் அதே பஸ்கா நாளில் அனுசரிக்க அழைக்கப்படுகிறோம்.
7. கர்த்தருடைய ராப்போஜனத்தை ஒவ்வொரு வாரமும் கொண்டாடுகிறவர்கள் அப்படி செய்வதற்கு வேதாகமத்தில் முன்நிகழ்ச்சி ஒன்று ஆதாரமாக இருக்கிறதாக கருதுகிறார்கள். அதாவது, வாரத்தின் முதல் நாளன்று ஆதி சபையினர் கூடி அந்த சந்தர்ப்பங்களில் “அப்பம் பிட்குதலில்” பங்கு கொண்டார்கள் என்பதை ஆதாரமாக கூறுகிறார்கள். அந்த அப்பம் பிட்குதலை ஞாபகார்த்த ராப்போஜனத்தோடு குழப்புவது ஒரு பெரிய தவறாகும். அது வெறும் ஒரு சாதாரண போஜனமாக இருந்தது.

8. வாரத்தின் முதல்நாளில் அனைவரும் தங்கள் ஊழியங்களிலிருந்து வந்து ஒன்று சேர்ந்து, துதித்தலும், சேர்ந்து உணவு அருந்துதலும், அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதலும் வழக்கம். மேலும் வாரத்தின் முதல் நாளில் நம்முடைய கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் சந்தோஷத்தைக் கொண்டாடுவதற்கு ஆதி சபையில் இது ஒரு சந்தோஷமான சமூக சம்பந்தமான பழக்கமாயிருந்தது. இந்த பொதுவான சமூக சம்பந்தமான பழக்கம் சகோதரத்துவத்தின் கட்டிலும், ஐக்கியத்தின் கட்டிலும், அவர்களை ஒன்று சேர்க்க உதவியது. இந்நாளிலும்கூட பிட்கப்படாத ரொட்டித்துண்டை பிட்டு யூதர்கள் தங்களது ஐக்கியத்தை தொடங்குகிறார்கள். வேறு விதமாக இது பஸ்காவைக் குறிக்கிறதற்கு ஏடுகளில் ஆதாரமாக ஒன்றுமில்லை. இந்த போஜனம் சம்பந்தமாக திராட்சைப்பழரசம் உபயோகிக்கப்பட்டதாக எங்கும் சொல்லப்படவில்லை. மேலும் இங்கு அப்பம், பிட்கப்பட்ட நமது கர்த்தருடைய சரீரத்தைக் குறிக்கிறதாகவும் எங்கும் சொல்லப்படவுமில்லை.
9. பஸ்கா ஆட்டுக்குட்டியின் நிறைவேறுதல் அவர்தான் கிறிஸ்து தெரிவித்தபோது பஸ்கா கொல்லப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்திகூறினார். அவரது மரணத்தை கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை நினைவுகூற அவர் மணவாட்டிசபை வகுப்பாரை அழைத்தார். இராஜ்ஜியத்திற்குள் அவர்களுடைய பிரவேசம் என்பது அவர்களது எல்லா நம்பிக்கைகளும் முழுமையாக நிறைவடைவதை குறிப்பதாக இருக்கிறது. அதன் நோக்கத்தை அதன் உண்மையான வெளிச்சத்தில் கிறிஸ்தவர்கள் பார்க்கக் கூடுமானால், கிறிஸ்துவினுடைய மரணத்தின் மதிப்பிற்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து, மற்ற வெவ்வேறு சமயங்களிலும், காலங்களிலும், ஒழுங்கற்ற விதமாகவும் குறிப்பான முக்கியத்துவம் இல்லாமலும் ஆசரிப்பதை விட்டுவிட்டு, அதன் ஆண்டுதோறும் நிகழுகிற கொண்டாட்டத்தில் மனப்பூர்வமாக சேர்வார்களானால் சந்தேகமில்லாமல் அவர்களுக்கு இது ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருக்கும்.

10. இந்த விஷயத்தில் கவனம் செலுத்துகிறவர்களும், எஜமானுடைய மரணத்தை “இதைச் செய்யும்போதெல்லாம் என்னை நினைவுக்கூரும்படி இதைச் செய்யுங்கள்” என்று சொன்ன அவருடைய விருப்பப்படி ஆண்டுதோறும் ஆசரிக்க பிரியமாயிருக்கிரவர்க்களுமான கர்த்தருடைய ஜனங்களில் சிறுவகுப்பார் உலகெங்கிலும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொண்டாட்டம் இருதயத்திற்கும், தலைக்கும் (மனதிற்கும்) விசேஷித்த ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது.

11. தெய்வீக தேவைகளுக்கு சமீபமாக நாம் இணங்கி வரும்போது, நாம் பெறுகிற ஆசீர்வாதங்களின் அளவு மிகவும் பெருமை வாய்ந்ததாகவும் இருக்கிறது. நமது ஆண்டவருடன் இன்னும் மிகவும் சமீபமாய் இழுக்கப்படுகிறோம். இந்த வருஷம் ஆசாரிப்பின் நாள் மார்ச் மாதம் 24ம் தேதி சாயங்காலம் ஆறு மணிக்குப்பிறகு வருகிறது. நம்முடைய கர்த்தருடைய மகா பலியின் ஞாபகார்த்தமாக “இதைச் செய்ய” கூடுவதற்காக எங்குமுள்ள எல்லா கர்த்தருடைய ஜனங்களையும் நாங்கள் வருந்திக் கேட்டுக் கொள்கிறோம். இது அவருடைய மரணத்தின் ஆண்டுவிழா, இந்தப் பண்டிகையை ஆசாரிக்கக் கடவோம்.